# ஆரோனும் மற்றும் ஆராதனைத் தலைவர்களும்

பிள்ளைகளுக்கு போதிப்பவர்கள் பாடம் W2b யை வாசிக்கவும்.

**பின்னணி:** மோசேயின் சகோதரனாகிய ஆரோனே இஸ்ரவேலின் முதல் தலைமை ஆசாரியன். மக்களின் பாவங்களுக்காக ஆரோன் கர்த்தரிடத்தில் பலியிட்டான். தேவன் உணவாக அங்கீகரித்த, சுத்தமான மிருகங்களான ஆடு போன்றவற்றின் குற்றமற்ற ஆண் மிருகத்தை அவன் பலியிட்டான். அவன் அவற்றின் தொண்டையை அறுத்து குற்ற நிவாரண பலியாக எரித்தான். இன்று இயேசுவே நமது தேவ ஆட்டுக்குட்டி. அவரே பாவ குற்றம் அற்றவராய் நமது பாவங்களுக்கு நிவாரண பலியாகக் கொல்லப்பட்டார்.

1. **உங்கள் மந்தை சரியான முறையில் ஆராதிக்க உதவி செய்யவும்.**

**ஆராதனையின் ஏழு அடிப்படைகளை அறிந்து கொள்க**

ஏறத்தாழ எல்லா சபைகளும் இந்தப் பொதுவான ஆராதனை ஒழுங்குகளை கடைபிடிக்கின்றன. நீங்கள் கடைபிடிக்கும் முறைக்கு மாறாகவும் வேறு விதமாகவும் கூட அவர்கள் அனுசரிக்கலாம். சிலர் வாரந்தோறும், ஒரு சிலர் அதற்கும் குறைவாகவும் செய்கின்றனர்.

1. துதித்தலும் நன்றி செலுத்துதலும்
2. ஜெபம்
3. வார்த்தையைக் கற்றுக்கொள்ளுதல்
4. கொடுத்தல்
5. பாவத்தை அறிக்கையிட்டு பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக் கொள்ளுதல்
6. அப்பம் பிட்குதல் (கர்த்தரின் பந்தி)
7. ஐக்கியத்தில் மகிழ்தல்



- லூக்கா 6:38 ல் இயேசு கட்டளை இட்ட ஆராதனை நடவடிக்கை எது?
- ஆதி. 18:20-33 ல் ஆபிரகாம் செய்தது என்ன?
- 2 சாமுவேல் 22:47 ல் தாவீது?
- நெகேமியா 8:1-3 ல் இஸ்ரவேலர்கள்?
- நெகேமியா 9:2 ல் இஸ்ரவேலர்கள்?
- யாத்திராகமம் 12:1-14 ல் சித்தரிக்கப்பட்ட நடிவடிக்கை என்ன?
- சங்கீதம் 133 ல் நீங்கள் காண்பது என்ன?

*(பதில்கள்: 1) கொடுத்தல் 2) ஜெபம் 3) துதி 4) வார்த்தை 5) பாவ அறிக்கை 6) கர்த்தரின் பந்தி 7) ஐக்கியம்.*

நூற்றாண்டுகளாக தேவ மக்கள் இந்த ஆராதனை நடவடிக்கைகளை கடைபிடித்துள்ளனர்.

- பழைய ஏற்பாட்டு யூதர்கள் இவற்றை இயேசு உலகத்துக்கு வருமுன்னரே யூத தேவாலயங்களில் கடைபிடித்தனர்.
- புதிய ஏற்பாட்டில் இயேசுவும் பரிசுத்த ஆவியானவரும் இவற்றிற்கு ஆழமான அர்த்தத்தை அளித்தனர்.
- அப்போஸ்தலருடைய போதனைகள் இயேசுவின் தியாக மரணத்திலும் ஜீவனளிக்கும் உயிர்த்தெழுதலிலும் அதிக முக்கியத்துவம் கொடுத்தன.
- அப். 2 ல் எருசலேம் சபை ஸ்தாபிக்கப்பட்டதில் இருந்து கிறிஸ்தவர்கள் இடைவிடாமல் இவற்றை கடைபிடித்தே வந்தனர்.

- வரலாற்றை நோக்கும் போது, தேவன் தந்த இந்த ஆராதனை ஒழுங்கைப் பின்பற்றிய சபைகள் எல்லாம் பாடுகளின் போதும் பெருகின என்ற அறிகிறோம்.
- இதைப் புறக்கணித்த சபைகள், மனிதர்கள் தாக்கிய போதும், பொய்யான போதனைகளை புகுத்திய போதும் குலைந்து அல்லது அழிந்து போயின.
- சில சபைகள், அங்கிகள், நறுமணப் பொருட்கள், ஓதுதல் போன்றவற்றோடு "மதசடங்குகளாக" இவற்றை செய்கின்றன. பிற 'சுதந்திரமாக' இவற்றைக் கடைபிடிக்கின்றன.
- வேதத்தில் மக்கள் தேவனை, பாடி, ஆடி, நின்று கொண்டு, கைகளை உயர்த்தி, தட்டி, முழங்காலிட்டு, முகங்குப்புற கீழே விழுந்து, அமைதியாக, சத்தமிட்டு, சாட்சிகளோடு, நாடகத்தோடு, குறியீடுகளாக ஓதுதலோடு, பலிகளோடு ஆராதித்தனர். தேவன் இந்த வெளிப்பிரகாரமான வடிவங்களைப் பற்றி கவலைப்படுவதில்லை - முழு இருதயத்தோடும் அவரை ஆராதிப்பதே முக்கியமானதாகும்.
- தேவனை துதிக்க ஆரம்பிக்கு முன் பெரும்பாலான சபைகள் சங்கீதங்களை வாசிக்கின்றன அல்லது பாடுகின்றன.
- தேவனைத் மையப்படுத்தி, அவரது செயல்கள், வல்லமை, நீதி, அன்பு, இரக்கம், உண்மை, பரிசுத்தம் ஆகியவற்றிற்காக அவரை மேன்மைப்படுத்தும் வசனங்களை நீங்கள் உபயோகிக்கலாம்.

தேவனைத் துதிக்க நமக்க பயன்படும் சில சங்கீத வசனங்கள்:

| | | | |
|---|---|---|---|
| 8:1 | 66:1-4 | 98:1-3 | 111:1-4 |
| 9:1-2 | 81:1-2 | 100:1-3 | 117:1-2 |
| 29:1-2 | 93:1-2 | 103:1-6 | 136:1-26 |
| 47:1 | 95:1-3 | 106:1-2 | 148:1-14 |

2. **வாரநாட்களில் செய்ய வேண்டிய காரியங்களை உடன் ஊழியர்களுடன் திட்டமிடுக.**

உங்கள் சபைக்குப் பொருத்தமான நடிவடிக்கைகளைத் தெரிந்து கொள்க.


- ஆராதனைக்குப் பின் உள்ள உணவு உபசாரத்திற்கு புதிய மக்களை அழையுங்கள்.
- சபை ஆராதனை கூட்டங்களில் இன்னும் கலந்து கொள்ளாத சிறுவர்களைக் கூட குழந்தைகளின் நாடகத்தில் பங்குபெறுமாறு கூறுங்கள்.
- கூட்டத்தில் தெரியுமாறு ஆராதனை வார்த்தைகள் அடங்கிய ஒரு துணிக்கொடியைக் காட்டவும்.
- சபை ஆராதனைக் கூட்டங்களில் கலந்து கொள்ளாத நண்பர்களின் வீட்டிலும் கூட தேவனை துதித்து ஜெபிக்கவும்.

3. **வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் கலந்தாலோசிக்கவும்**

சூழ்நிலைக்கும் வட்டார பழக்க வழக்கங்களுக்கும் ஏற்ற நடிவடிக்கைகளைத் தேர்வு செய்க.

- ஒரு சங்கீதத்தை வாசித்து அல்லது பாடி தேவனை துதித்து ஜெபிக்கவும்.
- சாட்சிகள் தருமாறும் கடந்த வார செயல்பாடுகள் குறித்து அறிக்கை தருமாறும் கேட்கவும்.
- இயேசு உலகத்திற்கு வருமுன்னர் ஆராதனை எவ்வாறு இருந்தது என்பதை செய்துகாட்டுக:
- பழைய ஏற்பாட்டு ஆராதனையை செய்து காட்டுவதாக விளக்கவும்.
- ஒரு உதவியாளரை உங்களோடு வெளியே அழைத்துச் செல்லவும். உள்ளே வரும்போது அவரை ஓர் ஆடு போல அழைத்து வரவும் (முழங்கால்/கை ஊன்றி நடந்து, "மே" என்று கத்தவும். ஒரு கயிற்றால் இழுத்து வருவது போல நடிக்கலாம்).

- ஆரோனாக நடிக்கும் ஒருவரை, கத்தியைத் தீட்டி, தீயைப் பற்ற வைத்து, ஆட்டை தலை தொங்கிய நிலையில் பலிபீடத்தில் (ஒரு நாற்காலி) கட்டவும்.
- ஆட்டின் தலையில் கை வைத்து "நான் என் பாவத்தையும் என் குடும்பத்தின் பாவத்தையும் அறிக்கை இடுகிறேன்."



**இஸ்ரவேலர்களின் வெட்டப்படாத கல்லாலான பலிபீடம்**

- ஆரோன் ஆட்டின் கழுத்தை வெட்டுவது போலவும், இரத்தம் பீறிப் பாய்வது போலவும், உடல் எல்லாம் பட்டது போலவும், கைகளை உதறி கத்துதல்:

  "ஓ! எல்லா இடமும் இத்தம்!"

  "பயந்து போன மிருகங்களின் சத்தத்தைக் கேளுங்கள்."

  "இரத்தம், கழிவுப் பொருட்களின் வாடை"

  "சே! புகையால் கண்ணெல்லாம் எரிச்சல்"

- மக்களைப் பார்த்து, "இது ஆராதனையா?" (அவர்கள் பதில் கூறட்டும்).
- இது அதிர்ச்சி தருவதும், வெறுப்பு அளிப்பதுமாக இருக்கிறது. ஏன்? நமது பாவங்களும் மகா பரிசுத்தரான தேவனுக்கு அருவருப்பாகவும் அதிர்ச்சி தருவதுமாக உள்ளது. இது மாறவில்லை. நமது பாவங்களை மூட இன்னும் ஒரு குற்றமற்ற பலியின் இரத்தம் தேவைப்படுகிறது.
- **கேட்க வேண்டியவை:** "நாம் நமது கூட்டங்களுக்கு இப்போது ஆட்டை ஏன் கொண்டு வருவதில்லை." விசுவாசிகள் பதில் கூறட்டும். அவர்கள் சரியான பதில் தராவிட்டால் உங்கள் வார்த்தையால் விளக்க வேண்டியது: இயேசுவே உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டி. 1 கொரி. 10:16 வெளிப்படுத்துவது போல, நாம் கர்த்தரின் பந்தியில் பங்கு கொண்டு அப்பமும் பானமும் பருகும் போது குற்றமற்ற தேவ ஆட்டுக்குட்டியின் சரீரத்திலும் இரத்தத்திலும் பங்கு பெறுகிறோம்.

தாங்கள் தயாரித்த நாடகத்தை வழங்குமாறு **பிள்ளைகளிடம்** கேட்கவும். அதைப்பற்றிய கேள்விகளையும் பெரியவர்களிடம் கேட்கவும்.

தகுந்த கலியாண வஸ்திரம் இன்றி இராஜாவின் விருந்துக்கு வந்த மனிதனின் கதையைக் கூறி (மத். 22:1-14) கர்த்தரின் பந்தியை அறிமுகப்படுத்தவும். சிறப்பான வஸ்திரம் என்பது தேவன் விசுவாசிகளை தமது பரிசுத்தத்தால் மூடுகிறார் என்பதைக் காட்டுகிறது. நமது பாவங்களை அறிக்கை இட்டு அவரது மன்னிப்பை பெறும் போது அவர் தரும் வஸ்திரத்தால் மூடப்படுகிறோம். **கர்த்தரின் பந்தியில்** பங்கு கொள்ளுமுன் நாம் இதைச் செய்ய வேண்டும். நித்தியமாகக் கிறிஸ்துவுடன் தேவ மக்களாகிய நாம் இணைக்கப்படுவதான பெரிய விருந்தை எதிர்நோக்கியே நாம் நற்கருணை விருந்தில் கலந்து கொள்ளுகிறோம்.

யோவான் 4:24 ஐ **மனப்பாடம்** செய்க. வாரநாட்களில் திட்டமிட்டுள்ள நடவடிக்கைகளை அறிவிக்கவும்.

இரண்டு அல்லது மூன்று பேர் அடங்கிய **குழுக்களை** அமைத்து ஒருவருக்கு ஒருவர் உதவி செய்யவும். அவர்கள் ஜெபித்து, தங்கள் திட்டங்களை உறுதிப்படுத்தி, ஒருவருக்கொருவர் ஊக்கப்படுத்தவும்.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net